**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 16.10.2025**
**OS. No. 45/2023**
**வழக்கு சாட்சி PW.1–தங்கவேல் , த/பெ. பழனியப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் BA வரை படித்துள்ளேன். தாவா சொத்தை ராஜமுத்து என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். ராஜமுத்து தற்போது சேலத்தில் குடியிருந்து வருகிறார். நான் தாவா சொத்தை கிரையம் பெறும்போது மொத்த நிலத்தையும் VAO மற்றும் சர்வேயர் மூலம் அளந்து அத்துக்கள் தெரிந்து கொண்டு கிரையம் வாங்கினேனா என்றால் VAO மட்டும் வந்திருந்தார், சர்வேயர் வரவில்லை, அவர் முன்னிலையில் அளந்து காட்டியபிறகு தான் நான் கிரையம் பெற்றேன். VAO விற்கு அளந்து காட்டும்படி மனு ஏதேனும் அளித்திருந்தேனா என்றால் இல்லை, நான் வாய்மொழியாக அழைத்ததன் பேரில் அவர் வந்திருந்தார். நான் அந்த சமயத்தில் தாவா சொத்தை அளந்து காட்டுவதற்கு மனு ஏதேனும் அளித்திருந்தேனா என்றால் இல்லை. நிலத்தை சர்வேயர் தான் அளக்கவேண்டும் என்றும், VAO விற்கு அளந்து காட்ட உரிமை இல்லை என்றும் அவர் அளந்து காட்டியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சர்வேயருக்கு தான் அளந்து காட்ட உரிமை உள்ளது, ஆனால் VAO நிலத்தை அடையாளம் காட்டலாம்.

2) VAO நான் கிரையம் பெற்ற நிலத்தை அடையாளம் தான் காட்டினாரா என்றால் ஆமாம். அளவீடு செய்து காட்டவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் கிரையம் பெற்ற சொத்திற்கு அத்துக்களை ராஜமுத்து காண்பித்தாரா என்றால் காண்பித்தார். என் நிலத்திற்கும், அதை சுற்றியுள்ள நிலத்திற்கும் இடையே கல்கரை உள்ளதா என்றால் மேற்கு புறம் மட்டும கல்கரை உள்ளது, மற்ற பக்கங்களில் முட்டுக்கல் உள்ளது. அதற்கு இடையில் உள்ள நிலத்தை தான் நான் அனுபவம் செய்து வருகிறேனா என்றால் ஆமாம். 28.12.2022 ல் பிரதிவாதி பிரச்சனை செய்ததாக நான் சொல்லியுள்ள சங்கதிக்கு ஆதரவாக புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால்

கொடுத்துள்ளேன், அதை நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் நான் காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை.

3) நான் மேற்கண்ட சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 மனுவில் எந்த தேதியில் பிரச்சனை நடந்தது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ரூ.830/—ஐ அளப்பதற்காக கட்டியதாக நான் சொல்லும் சங்கதிக்கு அந்த மனுவில் எந்த தேதி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த ரூ.830/— கட்டியதற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ—10 ஆக தாக்கல் செய்துள்ளேன். அந்த வா.சா.ஆ—10 ரசீதில் 04.09.2023 ல் கட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மேற்கண்ட மனுவில் ரூ.830/— கட்டியதாக சொல்லும் சங்கதியானது 28.12.2022 க்கு முன்பானது என்றால் சரிதான். அந்த ரசீதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) 28.12.2022 ல் நடந்த சம்பவம் குறித்தும், ரூ.830/— செலுத்தியது குறித்தும் நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் அந்த சங்கதிகள் ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 மனுவை நான் துணை ஆட்சியர் அவர்களிடம் நான் கொடுத்ததற்கு ஆதரவாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வா.சா.ஆ—7 மற்றும் வா.சா.ஆ.8 தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட வா.சா.ஆ—7 மற்றும் வா.சா.ஆ—8 ல் மனு நாள் 02.01.2023 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 மனுவை நான் துணை ஆட்சியரிடம் கொடுத்தற்கு அத்தாட்சி எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ—9 மனுவை நாங்களான தயாரித்து வழக்கிற்காக அதில் கைப்பட எழுதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, அது அனுப்பிய தபால் ரசீது என்னிடம் தான் உள்ளது.

5) பிரதிவாதிகள் 27.02.2023 ல் முட்டுக்கல்லை பிடிங்கி விட்டு பிரச்சனை செய்ததாக நான் சொல்லியுள்ள சங்கதிகள் தொடர்பாக வருவாய் துறையினரிடமோ, காவல் துறையினரிடமோ புகார் அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தெற்குபக்கமான உள்ள இரண்டு முட்டுக்கற்களை பிடிங்கிவிட்டார்கள், அது தொடர்பாக தான் நான் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். ச.எண்.41/1A2B ல் உள்ள முட்டுக்கற்களை பிரதிவாதிகள் பிடிங்கிவிட்டார்கள். பிரதிவாதிகள் முட்டுக்கற்களை பிடுங்கவில்லை என்றும், அது தொடர்பாக நான் எங்கும் புகார் கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக மேற்கண்ட சங்கதிகளை நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–7 மற்றும் வா.சா.ஆ.8 குறிப்பாணை தொடர்பான மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை, என்னிடம் உள்ளது, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

6) 30.12.2022 ம் தேதியில் நான் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஆமாம். அந்த அறிவிப்பில் எந்த தேதியில் என்ன பிரச்சனை நடந்தது என்று ஏதேனும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எந்த பட்டா எண்ணில், எந்த சர்வே எண்ணில் மரங்களை வெட்டி பிரச்சனை செய்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எத்தனை மரங்கள் வெட்டப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எத்தனை தேக்கு மரங்கள் அந்த சமயத்தில் என் நிலத்தில் இருந்தது என்றால் எனக்கு நினைவில்லை. தேக்குமரங்கள் வெட்டி விட்டதாக நான் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் வனத்துறையில் கொடுத்துள்ளேன். அந்த புகார் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7) மேற்கண்ட அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் பதில்ஏதேனும் அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னென்ன மரங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு, எவ்வளவு நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்று என்

அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அதனால் தான் நான் அறிவிப்பில் அது குறித்து எதுவும் விளக்கமாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் என் நிரூபண வாக்குமூலத்தில் 28.12.2022 லும், 27.02.2023 லும் பொய்யான குற்றச்சாட்டுகளை ஆதாரமில்லாமல் நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல, அதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளது. நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதி அ.வ.எண்.37/2023 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கை பிரதிவாதி அவருடைய சர்வே எண் குறிப்பிட்டு தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அதில் குறிப்பிட்டுள்ளது அவருடைய சொத்தின் சர்வே எண் இல்லை.

8) பிரதிவாதியின் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் அந்த வழக்கிலுள்ள சர்வே எண் அவருடையது அல்ல. பிரதிவாதிக்கு என்னென்ன சர்வே எண்களில் சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் சொத்தை அவர் தான் அனுபவித்து வருகிறாரா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி என்னுடைய நிலத்திற்கு பக்கத்து நிலத்துக்காரர் என்றால் சரிதான். நான் நிலம் வாங்குவது தொடர்பாக பிரதிவாதிகளிடம் ஏதேனும் தெரிவித்தேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் நிலத்தில் நான் பிரச்சனை செய்ததால், அவர் என் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றும், அதில் வழக்காடுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் தான் முதலில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். நான் பொய்யான சங்கதிகள் குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.